சேலம் மேற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் – முத்தமிழறிஞர் கலைஞர்

# ஐந்தாம் ஆண்டு நினைவு நாள் புகழ் அஞ்சலி!

## மாவட்டக் கழகச் செயலாளர் டி.எம்.செல்வகணபதி அறிக்கை !



சேலம், ஆக. 7-

சேலம் மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் டி.எம்.செல்வகணபதி அறிக்கை வருமாறு:-

இன்று ( 7ஆம் தேதி திங்கட் கிழமை) முத்தமிழறிஞர் கலைஞரின் 5ஆம் ஆண்டு நினைவு நாள். திராவிட இயக்கத்தின் பாதுகாவலராக, தமிழினத்தில் அழியா சொத்தாக, ஐந்து முறை தமிழகத்தின் முதலமைச்சராக, உலகமே போற்றும் பன்முகத் தலைவர் செம்மொழி நாயகராக நம் நெஞ்சமெல்லாம் நிறைந்து நிற்கும் நம் குடும்பத் தலைவரின் நினைவு நாள்.

தமிழே மூச்சாக தமிழர் நலமே வாழ்வாகக் கொண்டு இன உணர்வு, மொழி உணர்வு, சமூக நீதி, தீண்டாமை ஒழிப்பு, வறுமை ஒழிப்பு, பெண்கள் முன்னேற்றம், சாதி ஒழிப்பு என வரலாற்றில், பொது வாழ்வில் உலக அளவில் அனைவருக்கும் முன் உதாரணமாகத் திகழ்ந்த நம் குடும்பத் தலைவருக்கு நினைவு நாள். மாபெரும் தலைவருடைய நினைவு நாளை முன்னிட்டு கழகத் தலைவர் தளபதி அவர்களின் ஆணைப்படி வருகிற 7ஆம் தேதி சேலம் மேற்கு மாவட்டத்தில் உள்ள ஒன்றிய, நகர, பேரூர், வார்டு, கிளைக் கழகங்கள் தோறும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மாலையிட்டு மலர்தூவி புகழ் அஞ்சலி செலுத்தி, ஏழை எளிய மக்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கிட வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.

இன்று (07.08.2023 திங்கட் கிழமை) 7.30 மணியளவில் தாரமங்கலம் நகரத்திலுள்ள முத்தமிழறிஞர் கலைஞரின் திருவுருவச் சிலைக்கு சேலம் மேற்கு மாவட்ட தி.மு.க சார்பில் மாலை அணிவித்து புகழ் அஞ்சலி செலுத்தும் நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. எனவே, இந்நிகழ்ச்சியில் சேலம் மேற்கு மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், முன்னாள் இந்நாள் சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர், வார்டு, கிளைக் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், நகராட்சி, பேரூராட்சி மன்ற தலைவர், துணை தலைவர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், சார்பு அணி நிர்வாகிகள், கழக முன்னோடிகள், கழக உடன் பிறப்புகள் என அனைவரும் பெருந்திரளாக பங்கேற்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவரது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டத்தில்

# முத்தமிழறிஞர் கலைஞர் 5 ஆம் ஆண்டு நினைவு தின அமைதிப் பேரணி!

## மாவட்டச் செயலாளர் ஒய்.பிரகாஷ் எம்.எல்.ஏ. அறிக்கை!



கிருஷ்ணகிரி, ஆக. 7 -

கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டச் செயலாளர் ஒய்.பிரகாஷ் அறிக்கை வருமாறு:

தமிழினத் தலைவர், முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் நம்மையெல்லாம் விட்டு பிரிந்து சென்று நான்கு ஆண்டுகள் நிறைவடைந்து ஐந்தாம் ஆண்டு நினைவு தினம் இன்று (07.08.2023 - திங்கட்கிழமை) அனுஷ்டிக்கப்பட உள்ளது.

தலைவர் கலைஞர் அவர்களின் நினைவு தினத்தையொட்டி கிருஷ்ணகிரி மேற்கு மாவட்ட திமுக சார்பாக மாவட்டச் செயலாளரும், ஓசூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான ஒய். பிரகாஷ் எம்.எல்.ஏ. ஓசூர் ராம் நகரிலிருந்து அமைதிப் பேரணி சென்று ஓசூர் தாலுகா அலுவலகம் அருகில் உள்ள பேரறிஞர் அண்ணா அவர்களின் சிலை அருகே நிறை வடைந்து.

பேரறிஞர் அண்ணாவின் திருஉருவ சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தி அங்கே அலங்கரிக்கப்பட்டு வைக்கப்பட்டு வைக்கப்பட்டுள்ள முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் திருஉருவப்படத்திற்கு மாலை அணிவித்து, மலர் தூவி மரியாதை செலுத்தப்பட உள்ளது.

கிருஷ்ணகிரி மேற்கு மாவட்ட திராவிட முன்னேற்றக் கழகத்தை சேர்ந்த மூத்த முன்னோடிகள், மாநில, மாவட்ட, மாநகர, ஒன்றிய, பேரூர் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், அனைத்து அணிகளின் தலைவர், அமைப்பாளர்கள், மகளிர் அணியினர் உள்ளிட்ட அனைத்து நிர்வாகிகளும் இந்த அமைதிப் பேரணியில் கலந்து கொள்ள வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.


தமிழ்நாடு அரசு
**நெடுஞ்சாலைத்துறை**
**கட்டுமானம் மற்றும் பராமரிப்பு வட்டம், விழுப்புரம்**
**ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு**
**ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண்.21/2023-2024/தவஅ/நாள்-02.08.2023**

தமிழ்நாடு ஆளுநருக்காகவும், அவர்களின் சார்பாகவும் கண்காணிப்புப் பொறியாளர் (நெ), க(ம)ப, விழுப்புரம் வட்டம் அவர்களால், **சி.ஆர்.ஐ.டி.பி 2023–24–ன் கீழ் விழுப்புரம் (நெ) க(ம)ப கோட்டத்தில் (VPM-072)** ஒரு பணிக்கு இணையவழியில் ஒரு உறை முறையில் சதவீத ஒப்பந்தப்புள்ளிகள் **28.08.2023, 15.00 மணி வரை** வரவேற்கப்படுகிறது.

பணியின் விவரம், தோராய மதிப்பு, முன்வைப்பு தொகை, ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் மற்றும் அனைத்து இதர விவரங்களை **https://tntenders.gov.in** என்ற அரசு இணையதளத்தில் **11.08.2023** முதல் தெரிந்து கொள்ளலாம். ஏதேனும் திருத்தங்கள் / மாறுதல்கள் இருப்பின் மேற்குறிப்பிட்ட அரசு இணையதளத்தில் மட்டுமே வெளியிடப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

செ.ம.தொ.இ/4308/ஒப்பந்தப்புள்ளி/2023

**கண்காணிப்புப் பொறியாளர் (நெ)**
**க(ம)ப வட்டம், விழுப்புரம்**

"சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம், சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்"


## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### எலமந்தா
### ஆகஸ்ட் 7 (1995)



**தி.மு.கழக ஆதிதிராவிட நலப் பிரிவு மாநில செயலாளராகவும், தமிழக சட்டமன்ற மேலவை உறுப்பினராகவும் பணியாற்றியவர்.**

**எப்பொழுதும் ஓடியாடி ஏதாவது கழகப் பணி, பொதுப்பணி மற்றும் ஆதிஆந்திர மக்களுக்கான பல்வேறு பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதில் நிகரற்று விளங்கியவர்.**

**"தொண்டனாக அலைந்தவர். தொழில் மேற்கொண்டு சிறந்தவர். என் விருப்பம் நிறைவேற்றிட எம்.எல்.சியாகப் பொறுப்பேற்று மேலவையில் கருத்து முழக்கம் செய்தவர். கழகத்தை உயிராக எண்ணியவர்!" என தலைவர் கலைஞர் அவர்களால் 'வீரவேங்கையொன்று வீழ்ந்ததே!' என இரங்கல் கடிதத்தில் தெரிவித்துள்ளது குறிப்பிடத்தக்கது.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

# அண்ணா - கலைஞர் - தளபதி!

## பழுத்த காந்தியவாதி கிருஷ்ணம்மாள் உருக்கமிகு பேட்டி!

**காந்தியத் தம்பதியான கிருஷ்ணம்மாள் - ஜெகந்நாதன். தென் மாவட்ட குக்கிராமம் ஒன்றில் ஒடுக்கப்பட்ட சமூகத்தில் பிறந்தவரான கிருஷ்ணம்மாள் காந்திய இயக்கத்தில் பணியாற்றிக் கொண்டிருந்தவர். அதே தென் மாவட்டத்தின் ஆதிக்கச் சாதியைச் சேர்ந்த ஜெகந்நாதனை காந்திய இயக்கத்தில் சந்தித்த கிருஷ்ணம்மாள், அவரைத் தன் வாழ்க்கைத் துணையாக அடையாளம் கண்டார். "இந்தியா சுதந்திரம் அடைந்த பிறகுதான் திருமணம்; ஒரு தலித் பெண்ணைத்தான் திருமணம் செய்து கொள்வேன்; வாழ்க்கையைச் சமூக சேவைக்குத்தான் அர்ப்பணித்துக் கொள்வேன்" என்பன உள்ளிட்ட பல வைராக்கியங்களைக் கொண்டிருந்த ஜெகந்நாதன், ஒரு லட்சியத் திருவுருவாகவே கிருஷ்ணம்மாளைப் பார்த்தார் என்பது குறிப்பிடத்தக்கது.**

'இந்து தமிழ்திசை' நாளேடு – 'மாபெரும் தமிழ் கனவு' பகுதிக்காக – பழுத்த காந்தியவாதி கிருஷ்ணம்மாளிடம் சமஸ் பேட்டி கண்டிருந்தார். அதில் சில பகுதிகள்...



**செய்தியாளர்** : *அண்ணாவைச் சந்தித்த தருணத்தை நினைவுகூர முடியுமா? அண்ணா எப்படியான மனிதராக உங்களுக்குத் தோன்றினார்?*

**கிருஷ்ணம்மாள் ஜெகந்நாதன்** : அண்ணா பற்றி ஞாபகப்படுத்தும்போது, அவர் பாபா முன் மரத்தடியில், மண் தரையில் உட்கார்ந்து எளிமையாகப் பேசிக் கொண்டிருந்ததுதான் முதலில் ஞாபகத்துக்கு வருகிறது. ஐயாதான் (ஜெகந்நாதன்) பாபாவிடம் அண்ணாவை கூட்டிக்கொண்டு வந்தார். பூமி தான இயக்கத்தில் இணைந்து கொள்ளும்படி அண்ணாவை பாபா கேட்டார். பாபாவின் நல்லெண்ணத்திலும் முயற்சியிலும் தனக்குப் பெரும் மதிப்பிருப்பதாகவும், ஆனால் தங்களால் இதில் பங்கெடுத்துக்கொள்ள முடியாது என்றும் அண்ணா கூறினார். போராட்டத்தில் அவர் பங்கெடுத்துக் கொள்ள வில்லை. அன்றைக்குப் பெருநிலவுடைமையாளர்கள், மிராசுதாரர்கள் பலரும் காங்கிரஸைச் சார்ந்தவர்களாக இருந்தபடியாலும் அவர்களிடம் நிலம் கோரும் இடத்தில் தி.மு.க.வினர் இணைந்து நின்றால், அவர்கள் இதன் பொருட்டே கொடுக்க மறுக்கக்கூடும் என்றும் அண்ணா நினைத்தார். மேலும், நிலச் சீர்திருத்தம் நடப்பதே தீர்வு என்றும் அவர் எண்ணினார். அதேசமயம், எங்களுக்கு எங்கேனும் பிரச்சினை ஏற்படுமாயின் தன்னுடைய இயக்கத்தினர் துணை நின்று உதவுவார்கள் என்றும் உறுதியளித்தார்.

**செய்தியாளர்**: *பிற்காலத்தில் தி.மு.க.வினர் அப்படி உங்களுக்கு உதவுபவர்களாக இருந்தார்களா?*

**கிருஷ்ணம்மாள் ஜெகந்நாதன்** : அண்ணாவுக்குப் பின் கலைஞர். அவர் மன்னை நாராயணசாமியை எங்களுக்குக் காட்டிவிட்டார். அப்போது மன்னை நாராயணசாமிதான் தஞ்சைப் பிராந்தியத்தின் தி.மு.க. தலைவராக இருந்தார். பல சமயங்களில் எங்களுக்கு அவர் உதவியிருக்கிறார். ஒரு போராட்டத்தின்போது இரவில் எங்களுக்கு உதவி தேவைப்பட்டது. அப்போது மன்னை நாராயணசாமி அமைச்சராக இருந்தார். நாங்கள் மன்னார்குடிக்குப் போனோம். அமைச்சர் தரங்கம்பாடியில் இருப்பதாக எங்களுக்குச் சொன்னார்கள். நாங்கள் நள்ளிரவில் தரங்கம்பாடியை அடைந்தோம். அந்த நேரத்திலும் எங்களுக்கு உதவக் கிளம்பி ஓடிவந்தார். பிற்பாடும் இந்தப் பகுதி தி.மு.க. மாவட்டச் செயலாளராக யார் இருக்கிறார்களோ அவர்கள் எங்களுக்கு உதவும்படி கலைஞர் சொல்லி வைத்திருந்தார்.

தவிர, எந்தச் சமயத்தில் நான் சென்றாலும், உடனே சந்திக்க அனுமதிக்கும்படி கலைஞர் அவருடைய உதவியாளர்களுக்குச் சொல்லியிருந்தார். முதல்வராக இருக்கும்போது எத்தனையோ சமயங்களில் நான் கலைஞரைச் சந்திக்கச் சென்றிருக்கிறேன். அவரே எழுந்து வந்து வரவேற்பார். **"தயாளு இங்கே வா, அம்மாவுக்கு காபி கொண்டுவா"** என்று தன் மனைவியை அழைத்து எனக்கு அவர் கையால் காபி போட்டுத் தரச் சொல்வார்.

எங்கள் இயக்கம் மூலம் நிலங்களைப் பத்திரப் பதிவு செய்யும் போது அதற்குக் கட்டணம் செலுத்துவதற்குப் பணம் புரட்டுவதென்பது எங்களுக்குப் பெரிய சாவல். கலைஞரிடம் இதைச் சொன்னபோது, எங்கள் இயக்கத்தின் சார்பில் பத்திரப் பதிவு செய்யும் போது அதற்குக் கட்டணம் செலுத்த வேண்டியதில்லை என்று ஒரு அரசாணை பிறப்பித்தார். அது எங்களுக்கு அவர் செய்த வாழ்நாள் உதவி.

தன் மகன் ஸ்டாலினிடமும் எனக்கு எக்காலத்திலும் உதவ வேண்டும் என்று சொல்லியிருக்கிறார் கலைஞர். ஒருசமயம், வீடற்றவர்களுக்கு வீடு கட்டிக்கொடுக்க நெய்வேலி நிலக்கரிச் சுரங்கத்திலிருந்து எங்களுக்கு உதவினார்கள். அதாவது, கற்கள் செய்து கொள்வதற்கான ஃபிளையர்ஸ்' பொருளை எங்களுக்கு அவர்கள் தந்தார்கள். அங்கிருந்து அதை எடுத்துச் செல்ல வேண்டியது எங்கள் பொறுப்பாக இருந்தது. லாரி ஓட்டுநர்கள் நிறையப் பணம் கேட்டார்கள். கொஞ்சம் குறைந்த கட்டணத்தில் லாரிக்குச் சொல்லிவிட யாரையாவது அணுக வேண்டும் என்றிருந்தபோது சம்பந்தமே இல்லாமல் ஸ்டாலின் நினைவுக்கு வந்தார்.

அவரிடம் பேசினேன். **"கவலையை விடுங்கள், நீங்கள் பணமே கொடுக்க வேண்டாம். அது உங்களை வந்துசேர வேண்டியது என் பொறுப்பு" என்று சொல்லி ஏற்பாடு செய்தார்.**

நாங்கள் அறவழி இயக்கத்தினர் என்றாலும் நாங்கள் எதிர்த்து நின்ற பண்ணையாளர்களும் பெரு முதலாளிகளும் எந்த வழிக்கும் செல்லக் கூடியவர்கள்தான் என்பதால், என் வாழ்க்கை நெடுக வன்முறையை எதிர்கொள்ள வேண்டிய நிலையிலேயே நான் இருந்திருக்கிறேன். அப்படியான சூழல்களில் தி.மு.க.வினரின் ஆதரவு எனக்கு இருந்திருக்கிறது.

**நன்றி:**
**இந்து தமிழ் திசை**
**மாபெரும் தமிழ் கனவு**

கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம்

# குருந்தன்கோடு கிழக்கு ஒன்றிய வாக்குச்சாவடி முகவர்கள் ஆய்வுக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் – மேயர் ரெ.மகேஷ் சிறப்புரை!

கன்னியாகுமரி, ஆக. 7-

கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம், குருந்தன்கோடு கிழக்கு ஒன்றிய வாக்குச்சாவடி முகவர்கள் (BLA 2) ஆய்வு கூட்டம் 05.08.2023, சனி அன்று மாலை 6.00 மணிக்கு வெள்ளிசந்தை, பத்மநாப மண்டபத்தில் வைத்து குருந்தன்கோடு கிழக்கு ஒன்றிய செயலாளர் ஏ. சுரேந்திரகுமார் தலைமையிலும், பொதுக்குழு உறுப்பினர் எல்டபோன்ஸ், ஒன்றிய அவைத் தலைவர் நிஜாம், குளச்சல் சட்டமன்ற தொகுதி பார்வையாளர் மாநில சுற்றுச்சூழல் அணி துணைச் செயலாளர் உசிலம்பட்டி அருண் ஆகியோர் முன்னிலையிலும் நடைபெற்றது.

கூட்டத்தில் சிறப்பு விருந்தினராக கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட செயலாளர் நாகர்கோவில் மாநகராட்சி மேயர் ரெ. மகேஷ் கலந்து கொண்டு வாக்குச்சாவடி முகவர்களுக்கு (BLA 2) ஆலோசனைகள் வழங்கி சிறப்புரையாற்றினார்.

மேலும் கூட்டத்தில் யார் யார் கலந்து கொண்டார்கள் என்ற வருகை பதிவேடு ஆய்வு செய்யப்பட்டது. வருகை தராத வாக்குச்சாவடி முகவர்களுக்கு (BLA 2) ஒன்றிய மற்றும் பேரூர் செயலாளர்கள் மூலம் தகவல் தெரிவித்து ஆகஸ்ட் மாதம் 17-ம் தேதி இராமநாதபுரத்தில் கழக தலைவர் தளபதியார் அவர்கள் தலைமையில் நடைபெறவிருக்கும் தென் மண்டலத்துக்கு உட்பட்ட வாக்குச்சாவடி பொறுப்பாளர்கள் (BLA 2) பயிற்சி பாசறைக் கூட்டத்தில் கலந்து கொள்ள செய்யுமாறு அறிவுறுத்தப்பட்டது. கூட்டத்தில் பேரூர் செயலாளர்கள், வாக்குச்சாவடி முகவர்கள் (BLA 2) உட்பட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் கீழ்கண்ட தீர்மானங்கள் நிறை வேற்றப்பட்டன.

ஆகஸ்ட் மாதம் 17-ம் தேதி வியாழக்கிழமை அன்று இராமநாதபுரம், தேவிப்பட்டினம் சாலை, பேராவூர் என்ற இடத்தில் நடைபெறும் வாக்குச்சாவடி முகவர்கள் (BLA 2) பயிற்சி பாசறைக் கூட்டத்தில் கழக தலைவர் முதலமைச்சர் தளபதியார் அவர்கள் 2024-ல் நடைபெற உள்ள நாடாளுமன்ற தேர்தலில் வாக்குச்சாவடி முகவர்களின் தேர்தல் பணி குறித்து ஆலோசனைகள் வழங்க உள்ளார்கள். எனவே குமரி கிழக்கு மாவட்டத்திற்குட்பட்ட குருந்தன்கோடு கிழக்கு ஒன்றிய அனைத்து வாக்குச்சாவடி முகவர்களும் தவறாமல் கண்டிப்பாக கலந்து கொள்ள வேண்டும் என இக்கூட்டம் கேட்டுக்கொள்கிறது.

07.08.2023, திங்கட்கிழமை அன்று முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நினைவு தினத்தை முன்னிட்டு வடசேரி, பேரறிஞர் அண்ணா சிலை அருகில் இருந்து அமைதி பேரணி துவங்கி மணிமேடை சந்திப்பு, அரசமூடு சந்திப்பு வழியாக நாகர்கோவில், ஒழுகினசேரி தலைமைக் கழக அலுவலகம் வந்தடைந்து முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் முழுவுருவ வெண்கல சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட உள்ளது. இதில் அனைத்து கழக நிர்வாகிகளும், தொண்டர்களும் கலந்து கொள்ள வேண்டும் என இக்கூட்டம் கேட்டுக் கொள்கிறது.





குமரி கிழக்கு மாவட்டம் குருந்தன்கோடு கிழக்கு ஒன்றிய பாக முகவர்கள் (BLA2) கூட்டத்தில் மாவட்ட செயலாளரும் மேயருமான மகேஷ் ஆலோசனை வழங்கினார். உடன் ஒன்றிய செயலாளர் பிஎஸ்பி சந்திரா, மாவட்ட அவை தலைவர் எப்.எம்.ராசரத்தினம், தொகுதி பொறுப்பாளர் அருண் மற்றும் ஒன்றிய அவை தலைவர் அன்றோ சர்சில், ஒன்றிய நிர்வாகிகள் விஜயன், ரமணிரோஸ் ஏசுரத்தினராஜ், பேரூர் செயலாளர்கள் செல்வதாஸ், சுஜா ஜாண்சன் ரெஜிலின்ராஜ்குமார் சகாய கிறிஸ்து தாஸ் செவியர் அமல தாஸ் ஆகியோர்உள்ளனர்.